அசல்

(132)

15.11.22 N.K. Bharati.

அசல் – 1 நகல் – ~~இல்லை~~ 1

'கந்தன் கடிலே கதி' உ

Copied

Camp:—
N.K. Bharati,
Tellippalai,
Jaffna.

Head Thamil pandit
RAMANATHAN COLLEGE,
INUVIL, CHUNNAKAM.
15.XI.22

காணமற் போன உயர் கன்னித் தமிழ்த்தாயைக்
கோணமற் காத்த ஸ்ரீமணியே!

அநேக நமஸ்காரம். உபகுசலோபரி.
சிறியேன்மேல் அன்புவைத்து எழுதிய கடிதம்
வந்து பெருமை பாலித்தது.

ஸ்ரீமத்தின் ஆணைப்படியே 'உலகியல் விளக்கத்தின் முதற்பாகமாகிய 'அறநெறியியல்' என்னும் புத்தகத்தைப் புனிதப்படுத்த அனுப்பிவைத்திருக்கின்றேன். திருக்கண் பாலித்துத் திருவுளம் புரியும் வண்ணம் வேண்டுகின்றேன்.

இரண்டாம் பகுதியாகிய 'பொருணெறியியல்' இனிமேல் அச்சாகிவருகின்றது. யாழ் திருத்தம் அச்சாகும்.

உரிமையாக்கும் விஷயத்தைக் குறித்துத் தாங்களிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு மகிழ்ச்சி பெரிதுறுகின்றேன்.

எனது தந்தையார் பிரபந்தங்கள் என்றும் அகப்பட்டில. தங்கள் வாக்கின் பெருமையாற் கிடைக்கப்பெறின் உடனே அச்சிடுவேன். இன்றுமுதலாகவே முயன்றுவருவேன். இவ்வரிய விஷயத்தை ஞாபகமூட்டிய தங்கள் திருவடிகள் என்னெஞ்சை வாட்டினியதலா.

(132)

15.11.22 N. K. Bharati

அசல் – 1 நகல் – ~~இல்லை~~ 1

II

கௌரவ ஸ்ரீமான். பொன். இராமநாதனார் அவர்களுக்கு அனுப்பிய சிந்தாமணியை (மூன்றாம் பதிப்பை) நோக்கி மகிழ்ந்தேன்.

'உதயணன் கதை' 'புறநானூறு' என்னும் இவைகளை அச்சானவுடன் வி.பி. போஸ்டில் அனுப்புவிக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

இங்ஙனம்
நவநீதகிருஷ்ணன்.
திருவடித் தொண்டன்.

---

மட்டத்தரமான பிரதிகள் அபிப்ராயம் பெறுதற்கென்றே அச்சிடப்பெற்றன. உயர்ந்த தரமான பிரதியை அனுப்பவைப்பேன்.
[redacted] தால் நிறைவேறிய பண்ணார் [redacted]
அறநெறியாயால் இப்போது வெளியாடும் நோக்கமேன்.

அடிமை. ந. கி

அசல்

(132)

15.11.22 N.K. Bharati.

அசல் – 1 நகல் – ~~இல்லை~~ 1

Copied in

நூ.க. 'A'
P 306-308

அசல்

"கந்தன் கழலே கதி"

2.

Camp:—
N. K. Bharati.
Tellippalai.
Jafna.

Head Thamil Pandit
Ramanathan College,
Inuvil Chunnakam.
15 · XI · 22.

காணமற் போனவயர் கன்னித் தமிழ்த் தாயைக்
கோணமேற் காத்த குருமணியே!

அநேக நமஸ்காரம். உபய குசலோபரி. இதியென்மேல் அன்பு வைத்து எழுதிய கடிதம் வந்து பெருமை பாலித்தது.

சமுகத்தின் ஆணைப்படியே 'உலகியல் விளக்கத்தின் முதற்பாகமாகிய 'அறநெறியியல்' என்னும் புத்தகத்தைப் புனிதப் படுத்த அனுப்பியிருக்கின்றேன். திருக்கண் பாலித்துத் திருவருள் புரியும் வண்ணம் வேண்டுகின்றேன்.

இரண்டாம் பகுதியாகிய 'பொருணெறியியல்' அச்சாகி வருகின்றது. பிழை திருத்தம் இனிமேல் அச்சாகும்.

உரிமையாக்கும் விஷயத்தைக் குறித்துத் தாங்களிட்ட கட்டளையைச் சிரமேற் கொண்டு கவற்சி பெரிதுறுகின்றேன்.

எனது தந்தையார் பிரபந்தங்கள் என்னும் அகப்பட்டில. தங்கள் வாக்கின் பெருமையாற் கிடைக்கப் பெறின் உடனே அச்சிடுவேன். இன்று முதலாகவே முயன்று வருவல். இவ்வரிய விஷயத்தை ஞாபகமூட்டிய தங்கள் திருவடிகள் என்னைச் சை வாட்டினியகலா.

கௌரவ ஸ்ரீமாந். பொன். இராமநாதனர் அவர்களுக்கு அனுப்பிய சிந்தாமணியை (மீண்டும் பதிப்பை) நோக்கி மகிழ்ந்தேன்.

உதயணன் கதை 'புறநானூறு' என்னும் இவைகளை அச்சானவுடன் வி. பி. போஸ்டில் அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,
நவநீத கிருஷ்ணன்,
திருவடித் தொண்டன்.

மட்டத்தாள் பிரதிகள் அபிப்பிராயம் பெறுதற்கென்றே அச்சிடப் பெற்றன. உயர்ந்த தாள் பிரதியை நூல் நிறைவேறிய பின்னர் அனுப்பிவைப்பேன். அறநெறியியலை இப்போது வெளியிடும் நோக்கமுண்டு. அடிமை ந. கி.

அசல்

37 Apr. 40

copied

உ

சுன்னாகம்.
நவநீதகிருஷ்ணபாரதியார்.
15.11.22

க. க. A P. 306-308.

45